**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.25**
**Defence**
**Court**

**Name : அப்துல்சமூது**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **11.01.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசி பெரியபள்ளிவாசல் தெருவில் குடியிருக்கிறேன். சம்பவத்தின்போது சம்பாதெருவில் செல்போன் கடை வைத்திருந்தேன். என் கடைக்கு வலதுபக்கம் அ.சா.-24 டீக்கடை வைத்திருந்தார். என் கடைக்கு எதிரே யாரம் புதிதாக யாரும் கடையை வாடகைக்கு எடுக்கவில்லை. 2007 ம் ஆண்டு எங்கள் ஊரில் கூலக்கடை

பஜாரில் இருதரப்பினரும் மோதிக்கொண்டதில் இருதரப்பிலும் தலா 3 பேர் வீதம் 6 பேர் இறந்துபோனார்கள் என்று கேள்விப்பட்டேன். எங்கள் தெருவில் 2007 ம் ஆண்டு பரபரப்பாக புதிய நபர்கள் வந்து செல்லும் படியான சம்பவம் எதையும் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகளை யாரையும் தெரியாது. சம்பவத்திற்கு முன்னர் குமார் பாண்டியன் என்பவர் இறந்துபோனார் என்று தெரியும். அவர்களது உறவினர்கள் இந்த வழக்கில் உள்ளார்களா என்று எனக்கு தெரியாது. பெரிய கோவிலுக்கு எதிரே உள்ள தொழுகைப்பள்ளி பற்றி எனக்கு தெரியும் . அங்கு நான் தொழுகை செய்ய போவதில்லை. சுப்பிரமணி என்பவர் வெற்றிலை,பாக்கு கடையை நடத்தினார். என் கடைக்கு எதிரில் கண்ணன் என்பவர் டெய்லர் கடை நடத்தினார். அந்த இடத்திற்கு போலீசார் வந்தார்களா என்று எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் புகார்தாரர் அலாவுதீன் என்பவரை தெரியாது.
என்னை 2007 ம் வருடம் அக்டோபர் மாதம் போலீசார் விசாரித்தனர் என்றும் அப்போது நான் ைஹடெக் மொபைல் என்ற பெயரில் செல்போன் கடை நடத்துவதாகவும் எனது செல்போன் கடைக்கும் காளையப்பன் டீக்கடைக்கும் இடையேஇந்து முன்னணி அமைப்பை சேர்ந்த ராஜுஎன்பவர் சுமார் 2 1/2 மாதங்களாக ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து அவர் பொறுப்பில் வைத்திருந்தார் என்று கூறினேன் என்று சொன்னால் அவர் பெயர் விபரம் தெரியாது. ஆனால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார்

என்னை விசாரித்தார் என்றும் தற்போது வழககிற்காக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 14.08.2007 ம் தேதி கூலக்கடை பஜாரில் 6 நபர்கள் இறந்தார்கள் என்றும் அதை கேள்விப்பட்டேன் என்றும் என் கடைக்கும் காளையப்பன் கடைக்கும் இடை யே உள்ள இந்துமுன்னனி அலுவலகத்தில் சம்பவத்திற்கு முதல் நாள் காலை 9.30 மணியளவில் அலெக்ஸ், சேகர், செண்பகம், அமர்ந்திருந்தார்கள் என்றும் அந்த மூவரும் நான் கடை திறக்க வரும்போது நேரடியாக இந்துமுன்னணி அலுவலகத்திற்கு சென்றனர் என்றும் அப்போது அவர்கள் நாளைக்கு இவ்வளவு நேரத்திற்குள் தயாராகிவிடவேண்டும் என்றும் ஹனிபா என்பவரையும் அப்துல்லா என்பவரையும் போட்டுதள்ளிவிடவேண்டும் என கூறிக்கொண்டே சென்ாறர்கள் என்றும் மறுநாள் காலை 9.00 மணியளவில்பரபரப்பாக வந்துசென்றார்கள் என்றும் சக்தி, அவர் தம்பி செந்திலையும் மைத்துனர் சுப்பிரமணி, கபிலன், சுரேந்தர் ஆகியோர்களையும் காலை 9.30 மணியளவில் வந்து ராஜ் கேபிள் டிவிக்கு முன்னார் இருந்து வடக்கே சென்றார் என்றும் அந்தஅளவில் எனக்கு தெரிந்தவிபரங்களை நான் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த 3 தினங்களுக்கு முன்பே இந்துமுன்னணி அமைப்பிற்கு ஆட்கள் பரபரப்பாக வந்துசென்றனர் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. செண்பகம் ,கபிலன், சுரேந்தர் மற்றும் சிலரை எனக்கு தெரியும் என்றும் அவர்கள் அந்த அலுவலகத்திற்கு வந்துசென்றார்கள் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார்

என்னை விசாரித்தனர் என்றும் தற்போதும் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**